மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு,

**முன்னிலை : திரு. மூ.ராமநாதன், B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2026**

IN

**அசல் வழக்கு எண். 14/2025**

1. பூங்காவனம் என்ற கருப்பையா
2. சுப்புலட்சுமி ... மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள்

/எதிர்/

1. வேல்மயில்
2. பாலமுருகன்
3. குருவம்மாள்
4. கண்ணன்
5. விஸ்வநாதன் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் கடந்த 18.06.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக 17.06.2026 அன்று வந்தபோது, மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S, உதயக்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனு தபசில் சொத்துக்களை அளவீடு செய்து, மனு தபசில்சொத்தில் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து ஆணையர் ஒருவரை நியமனம் செய்து தபசில் சொத்தின் புறத்தோற்றத்தையும், வழக்கு சொத்தின் உண்மையான உடமை மற்றும் Physical Features nature of enjoyments existing structures, fencing, pathway மற்றும் பிற தொடர்புடைய நிலைகளை ஆய்வு செய்து நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதற்கு ஏதுவாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26, விதி 9, 10 மற்றும் பிரிவு 151–ன் படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்** :–

2.1) இம்மனுவில் 1ம் மனுதாரர் /1ம்பிரதிவாதி ஆவார். 2ம் மனுதாரர் / 2ம் பிரதிவாதி மனைவிக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிகள் வழக்குரை சொத்தை பொறுத்து வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி அனுபவத்தை 1,2 பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாதென வாதிகளுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் ஆதரவாக நிரந்தர நிலையுத்து கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டது. அசல் வழக்கானது நிலுவையிலுள்ள நிலையில், தபசில் சொத்தில் தற்போதைய நிலை, கட்டிடம், கட்டுமானம் நிலை, அதிலுள்ள மற்ற குறிப்புகள் மற்றும் இயல்பு நிலை குறித்து பிரச்சினை நிலவி வருவதால், நேரில் ஆய்வு செய்து நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதற்கு ஏதுவாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

3.1) வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு நிரந்தர நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கு என்பதால் உரிமை ஆவணங்கள் மூலமாகவே வழக்கில் உரிமையை பரிசீலிக்க முடியும் என்றும், கமிஷினர் நியமன மனுமூலமாக சாட்சியம் தயார் செய்ய இயலாது என்பதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியும், தபசில் சொத்தில் தற்போதைய நிலை, கட்டிடம், கட்டுமானம், நிலை அதிலுள்ள மற்ற குறிப்புகள் மற்றும் இயல்பு நிலை அம்சங்கள் குறித்து பிரச்சினையை ஆணையர் நியமன மனு மூலம் சாட்சியம் சேகரிக்க இயலாது என்றும், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு ஆவணங்கள் மூலம் உரிமையுள்ளதா அல்லது வாதிகளுக்கு ஆவணங்கள் மூலம் உரிமை உள்ளதா என்பதை இஞ்சங்ஷன் வழக்கில் தீர்மானம் செய்ய இயலும். எனவே, மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய உத்தரவிட வேண்டி பிராத்திக்கப்படுகிறது.

4. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டது. உபய தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், ஆணையர்

நியமனம் செய்யக் கோரும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7.**தீர்வு** :–

7.1) இருதரப்பு வாதங்கள், மனு மற்றும் எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் தபசில் சொத்தில் தற்போதைய நிலை, கட்டிடம், கட்டுமானம் நிலை, அதிலுள்ள மற்ற குறிப்புகள் மற்றும் இயல்பு நிலை குறித்து பிரச்சினை நிலவி வருவதால், நேரில் ஆய்வு செய்து நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதற்கு ஏதுவாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.2) எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில், உரிமை ஆவணங்கள் மூலமாகவே வழக்கில் உரிமையை பரிசீலிக்க முடியும் என்றும், கமிஷினர் நியமன மனுமூலமாக சாட்சியம் தயார் செய்ய இயலாது என்பதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியும், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு ஆவணங்கள் மூலம் உரிமையுள்ளதா அல்லது வாதிகளுக்கு ஆவணங்கள் மூலம் உரிமை உள்ளதா என்பதை இஞ்சங்ஷன் வழக்கில் தீர்மானம் செய்ய இயலும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.3) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுவை ஆராய்ந்து பார்க்கையில், அசல் வழக்கில் நிரந்தர நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள நிலையில், தபசில் சொத்தில் தற்போதைய நிலை, கட்டிடம், கட்டுமானம் நிலை, அதிலுள்ள மற்ற குறிப்புகள் மற்றும் இயல்பு நிலை குறித்து பிரச்சினை நிலவி வருகின்ற காரணத்தினால் எதிர்கோருரிமை வழக்கு எதுவும் கோராமல் மேற்படி தபசில் சொத்தின் அளவுகள் மற்றும் தன்மை குறித்து ஆய்வு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து, மனுச் சொத்தினை ஆய்வு செய்து நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்படும் அறிக்கையானது இவ்வழக்கினை தீர்மானம் செய்ய எந்த வகையிலும் உதவாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் தாவா மனுவில் ஆணையரை

என்ன காரணத்திற்காக நியமனம் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு கூறாமலும், நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதன் மூலமாக எவ்வாறு தாவா வழக்கை நிரூபணம் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டு கூறாத நிலையிலும், மேலும், நீதிமன்ற ஆணையரை சாட்சியங்களை சேகரிக்க வேண்டி நியமிக்க கூடாது என்று பல முன்தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தில் அனுபவத்தையும், பாத்தியத்தையும் நிரூபணம் செய்வதற்கு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மட்டுமே போதுமானதாக இருக்கும் என்பதால், நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–** இல்லை.

RAMANATHAN MOORTHI Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வத்திராயிருப்பு.
**இ.ம.எண். 3/2025**
**இன்**
**அ.வ.எண்.14/2025**
சீரான/வரைவு உத்தரவு
நாள். 06.07.2026